Tsi10T

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வுகள் - நவம்பர் 2022

வகுப்பு 10

தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 50

**அ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 8x1=8

1. மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
2. "தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
   அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்
   ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
   இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
   ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்
3. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
4. மேன்மை தரும் அறம் என்பது?
   அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) மறு பிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது
   ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது?
5. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
   அ) உதியன் சேரலாதன் ஆ) அதியன் பெருஞ்சாத்தான்
   இ) பேகன் கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் திருமுடிக்காரி
6. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் – இவ்வடி குறிப்பிடுவது
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

பாடலைப் படித்து விடை தருக.

"பகர்வனர் திரிதிரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்"

7. இவ்வடிகள் இடம் பெற்ற நூல்?
   அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம்
   இ) கம்பராமாயணம் ஈ) காலக்கணிதம்
8. காருகர் – பொருள் தருக.
   அ) ஓவியர் ஆ) கைத்தொழில் செய்வோர்
   இ) நெய்பவர் ஈ) பொற்கொல்லர்

**ஆ. எவையேனும் ஆறனுக்கு விடை தருக.** 6X2=12

9. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக
10. குறிப்பு வரைக அவையம்.
11. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
12. பாசவர், வாசவர், பல நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
13. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

14. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக.
15. கலைச்சொல் தருக. அ. யுவநவெ ஆ. டீநடநைக
16. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.

**இ. எவையேனும் நான்கனுக்கு விடை தருக. (17 கட்டாய வினா)** 4X3=12

17. அடிமாறாமல் எழுதுக.
'தூசும் துகிரும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல், அல்லது 'மாற்றம் எனது' எனத் தொடங்கும் காலக்கணிதப் பாடல்
18. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் இடம் சுட்டி விளக்குக?
19. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா கவிபாடுகிறார்?
20. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
21. அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.
22. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்ப்பாடு எழுதுக.
ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

**ஈ. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 2x5=10

23. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

(அல்லது)

ஆ) பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக
24. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



சிவக்குமார். மு.
ஸ்ரீராம் மெட்ரிக் மேநி,
உல்லம் - 627809
தென்காசி.

**உ. விரிவான விடையளிக்க.** 1x8=8

25. அ) 'மங்கையராய்ப் பிறப்பதற்கே' என்னும் தலைப்பில் சாதனைப் பெண்கள் இருவரைப் பற்றி விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின் வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

------

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593